**Dinakaran 16.07.2017**

## கேம்பஸ் டேலன்ட்

# மாற்றுத்திறனாளிகளுக்கு புளூடூத் சக்கர நாற்காலி

சேலம், ஜூலை 16: "ஒவ்வொரு வரலாற்றுக்கு பின்பும் ஒரு வலி இருக்கிறது. எங்கள் கண்டுபிடிப்புக்கு பின்னாலும் சிலதுளி கண்ணீர் இருக்கிறது". எங்கள் உயிர்நண்பர் ஒருவர் பன்முகத்திறமை கொண்ட மாற்றுத்திறனாளி. அவர் சாதாரண நாற்காலியில் இருந்து சக்கர நாற்காலிக்கு மாறும் போது படும் சிரமங்கள், கொஞ்சமல்ல. கண்டிப்பாக ஒருவர் துணையில்லாமல் அவரால் சக்கர நாற்காலிக்கு மாற முடியாது. அவரைப் போன்ற ஆயிரக்கணக்கான மாற்றுத்திறன் சகோதரர்களை மனதில் வைத்து, அவர்களின் சிரமம் போக்க நாங்கள் உருவாக்கிய செயலிக்கு பெயர் தான் 'டிசைனிங் அன்டு டெவலப்மென்ட் ஆப் வீல்சேர் பார் பிசிக்கல் சேலன்ஜிடு யூசிங் அட்மெகா-328,". என்கின்றனர் சேலம் சோனாகல்லூரியின் எலக்ட்ரிக்கல் அண்ட் எலக்ட்ரானிக் இன்ஜினியரிங் (இஇஇ) இறுதியாண்டு மாணவர்கள் கோபி, தினேஷ் மற்றும் பரத் ஆகியோர்.

"சக்கர நாற்காலிகளில் இந்த செயலியை பயன்படுத்தும் போது ஜாய் ஸ்டிக்கை பயன்படுத்த தேவையில்லை. ஜாய்ஸ்டிக்கின் வேலையை இந்த செயலி செய்துவிடும். சக்கர நாற்காலிகளில் மோட்டார் உட்பட எந்த பொருட்களையும் மாற்றத் தேவையில்லை. புளூடூத் மட்டும் பொருத்தினால் போதும். சக்கர நாற்காலியை வலது, இடது புறங்களில் திரும்புதல், முன்னோக்கி செல்லுதல், பின்னோக்கி செல்லுதல் போன்ற அனைத்து விசைகளையும் இந்த செயலி ஏற்றுக் கொண்டு செயல்படும். வேகத்தடைகளில் சக்கர நாற்காலிகள் ஏறி இறங்குவதில் உள்ள சிரமங்களை சமாளிக்க, ஐந்தாவதாக ஒரு சக்கர நாற்காலியின் மையத்தில் இணைக்கப்பட்டு, இதனுடன் ஆப்ஜெக்ட் சென்சார் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஐந்தாவது சக்கரமானது முன்கூட்டியே சென்சார் உதவியுடன் கண்டறியப்பட்டுள்ள வேகத்தடையை சமாளிக்க முன்னிரண்டு சக்கரங்களை பிஸ்டன் உதவியுடன் சிறிதளவு உயர்த்துகிறது. உயர்த்தும்போது நாற்காலியில் உட்கார்ந்திருப்பவர்கள் கீழே விழாத வண்ணம் பின்னால் உள்ள சக்கரத்தின் மையத்தில் உள்ள ஆறாவது சக்கரம் நீண்டு தாங்கிப்பிடிக்கிறது. இதனால், சக்கரநாற்காலிகளை எந்தவித சிரமங்களும் இல்லாமல் மொபைல் போன் மூலம், எளிதாக கையாளலாம். இனி தயாரிக்கப்படும் சக்கர நாற்காலிகளில் புளூடூத் இணைத்துவிட்டால், இந்த செயலியை அனைவரும் பயன்படுத்த வசதியாக இருக்கும்" என்பது இவர்களின் நம்பிக்கை.

இந்த கண்டுபிடிப்புக்கு இன்ஸ்டியூட் ஆஃப் இஞ்ஜினியர்ஸ் இன் இண்டியா (ஐஈஐ)வின் சார்பில் மதுரையில் நடந்த அறிவியல் கண்காட்சியில் "பெஸ்ட் புராஜெக்ட்" அவார்டு கிடைத்துள்ளது. கல்லூரி படிப்பை முடித்தவுடன் முறையாக அனுமதி பெற்று, அனைத்து தரப்பு மாற்றுத்திறனாளிகளுக்கும் பயன்படும் வகையில் இந்த செயலியை அறிமுகப்படுத்துவோம். மேலும், கைகள் இல்லாத மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்றவகையில் வாய்ஸ் மூலம் இயங்கும் செயலியை கண்டுபிடிப்பதுதான் தங்கள் லட்சியம் என்று, தங்கள் எதிர்கால இலக்கையும் பதிவு செய்கின்றனர் இந்த நண்பர்கள்.



### சேலம் மாணவர்கள் கண்டுபிடித்த அட்மெகா-328 ஆப்



▶ தினேஷ், பரத், கோபி

### இப்படித்தான் இயங்குது செயலி

இந்த செயலி புளூடூத்தை அடிப்படையாக கொண்டு மட்டுமே இயங்குகிறது. அதிகபட்சமாக 3மீட்டர், தொலைவில் உள்ள சக்கரநாற்காலியை இயக்கும் வகையில் செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில், ஹெச்.சி50 புளூடூத் மாடல் பயன்படுத்தப்பட்டுள்ளது. வீல்சேரில் புளூடூத் செட் செய்வது தான் மிகவும் அவசியம். ஆண்ட்ராய்டு மொபைலில் புளூடூத்தை தேடவேண்டும். பச்சை சிக்னல் கிடைத்தவுடன் கனெக்ட் செய்யவேண்டும். இதன் விசைகளை பயன்படுத்தி அருகில், வரச்செய்து உபயோகிக்கலாம்.